பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 02 2026 6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - மொரீஷியஸ் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்த உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியா-அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் நாட்டின் நலனுக்கான மிகச்சிறந்த ஒப்பந்தம் என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. திருப்பதி - மண்டபம் இடையேயான ரயில் சேவை வாரத்திற்கு 4 நாட்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதற்கு பிரதமருக்கும், ரயில்வே அமைச்சருக்கும் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

4. மீனவர்களின் நலனுக்கான பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

5. சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வல் தேவ் - நிதின்குமார் சின்ஹா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - மொரீஷியஸ் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது என்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலம், தம்முடன் தொலைபேசியில் பேசியபோது இதனைத் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு வாரணாசியில் அவரை சந்தித்தது முதல் தற்போது வரை இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விரிவாக விவாதித்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான ஒற்றுமை, மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட உறவுகள், வரலாற்றுச் சிறப்பு மிக்க இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது என முடிவு செய்யப்பட்டதாக அவர் அதில் கூறியுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை தொடர்ந்து நீடிப்பதற்கு இரு நாடுகளும் பணியாற்றுவது என்றும் ஆலோசிக்கப்பட்டதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டுக்கு இந்தியா வரும் திரு. ராம்கூலத்தின் வரவை தாம் எதிர்நோக்கி இருப்பதாக திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இந்தியா-அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் நாட்டின் நலனுக்கான மிகச்சிறந்த ஒப்பந்தமாக திகழ்கிறது என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் மதுராவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஒப்பந்தத்தில் விவசாயிகளின் நலன்கள் முழுமையாக பாதுகாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

விவசாயிகள், மகளிர் மற்றும் இளைஞர்களின் கனவுகளுக்கு புதிய முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் வாய்ப்புகளை அளிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் அவர்களின் முன்னேற்றம் மற்றும் மேம்பாடு புதிய உயரத்தை எட்டும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தின் ரயில்வே திட்டங்களுக்காக வரும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் 7 ஆயிரத்து 611 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், தமிழக ரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்கவில்லை என்ற முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினின் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார்.

தமிழகத்தில் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் அதில் கூறியுள்ளார்.

<<<<>>>>

திருப்பதி - ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் இடையே வாரத்திற்கு 3 நாட்கள் இயக்கப்பட்டு வந்த ரயில் சேவையை 4 நாட்களாக அதிகரிக்க உத்தரவிட்ட பிரதமருக்கும், ரயில்வே

அமைச்சருக்கும் தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு கூடுதல் நாட்கள் ரயில் சேவை வழங்க தாம் கடிதம் எழுதியிருந்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் நரிக்குறவர்களின் நலனுக்காக குடியிருப்பு மற்றும் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை கோட்டூர்புரத்தில் **158** குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவுக்கான ஆணைகளை வழங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த நரிக்குறவர்களுக்கு வாக்குரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

மீனவர்களின் நலனுக்கான பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் மீனவர் நலவாரியம் சார்பில் நடைபெற்ற குறைதீர்க்கும் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், கடற்கரைப் பகுதியில் மீன்பிடி இறங்குதளம், தூண்டில்வளைவு பாலங்கள் உள்ளிட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாக கூறினார்.

மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை 8 ஆயிரம் ரூபாயாக வழங்கப்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மீனவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்த பின்னர் அவர்களின் குழந்தைகள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பயன்பெற்று வருவதாக திருமதி கீதா ஜீவன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபியின் தேர்தல் அறிக்கைக் குழு ஆலோசனைக் கூட்டம் சென்னையில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு வாக்காளர்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் குறித்து கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன்

விவாதித்ததாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

யானைகள் பாதுகாப்பு திட்டத்திற்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் நடப்பாண்டில் **5** லட்சத்து **74** ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Dhandapani - 39 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

காஸாவின் தெற்குப் பகுதியில் உள்ள ரஃபாவில் இஸ்ரேல் ராணுவப் படையினர் நடத்திய தாக்குதலில் **4** தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

-------------

ஜப்பான் நாட்டின் **Mizuho** வங்கியின் தலைமைச் செயல் அதிகாரி திரு. **Masahiko Kato** மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயலை புதுதில்லியில் நேற்று சந்தித்துப் பேசினார்.

--------------

டிஜிட்டல் மோசடிகளைக் கையாள்வதற்கு தொலைதொடர்புத்துறை உள்ளிட்ட சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசனை நடத்தி நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை வகுக்க வேண்டும் என்று மத்திய அரசை உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

--------------

சட்டப்பேரவைத் தேர்தலில் அதிக அளவு வாக்குப்பதிவு நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் வாக்காளர்களுக்கான விரிவான விழிப்புணர்வு பிரச்சாரத்தை புதுச்சேரி தேர்தல் துறை தொடங்கியுள்ளது.

--------------

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 8 தீயணைப்பு நிலையங்களிலும் தீ பாதுகாப்பு குறித்த அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டது.

--------------

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் காவல்துறையினரின் கண்காணிப்பு பணிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஸ்டாலின் நேரில் ஆய்வு செய்தார்.

--------------

பயிர் பாதுகாப்பு, ஊதிய உயர்வு, மானியக் கடன் தள்ளுபடி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு. ஷேக் அப்துல் ரகுமானிடம் விவசாயிகள் மனு அளித்தனர்.

--------------

கம்போடியாவில் வேலை வாங்கித் தருவதாக கூறி, மியான்மருக்கு கடத்திச் செல்லப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 3 பேர் ஆட்சியர் திரு. இளம் பகவத் மேற்கொண்ட நடவடிக்கையால் மீட்கப்பட்டனர்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழியை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் அலுவலர்கள் எடுத்துக்கொண்டனர்.

--------------

கடலூர் மாவட்டத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆட்சியர் திரு. சிபி ஆதித்யா செந்தில் குமார் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வல் தேவ் - நிதின்குமார் சின்ஹா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-1 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் Petr Bar Biyukov - Llia Simakin இணையை வென்றது.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் சசிகுமார் முகுந்த் - இங்கிலாந்தின் Joy Clarke இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

--------------

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற ஆட்டக் கணக்கில் நெதர்லாந்தை வென்றது.

--------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுடன் பாகிஸ்தான் அணி விளையாட அந்நாட்டு அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

**<<<<The End>>>>**